# <u>அறிவித்தல்</u>

அரசியலமைப்பின் 121(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் **“பயங்கரவாத எதிர்ப்பு”** எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

அரசியலமைப்பின் 123(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் சட்டமூலத்தின் 4(அ), 4(ஆ), மற்றும் 68(5) வாசகங்கள் அரசியலமைப்பின் 3 ஆம் உறுப்புரைக்கு முரணானதெனவும் 93(3)ஆம் வாசகம் அரசியலமைப்பின் 3 ஆம் மற்றும் 4 ஆம் உறுப்புரைகளுக்கு முரணானதெனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதோடு, இச்சட்டமூலம் அதற்கு சாதகமாக அளிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கை பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் (சமூகமளிக்காதோர் உட்பட) மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாததாக இருப்பதோடு, மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமெனவும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எவ்வா ாறயினும் குறிப்பிட்ட வாசகங்களில் நீதிமன்றம் கருதுகின்றவாறு திருத்தங்களை மேற்கொள்வதன்மூலம் முரண்பாடு நீங்கும் என உயர்நீதிமன்றம் தொ ிவித்துள்ளது.

சட்டமூலத்தின் ஏனைய வாசகங்கள் சாதாரண பெரும்பான்மையால் நிறைவேற்றப்படலாமெனவும் உயர் நீதிமன்றம் மேலும் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.